டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 09.04.2025 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 244 - Madurai | Online Edition

# குறைந்தபட்ச ஆதரவு விலையில் பருத்தியை கொள்முதல் செய்கிறது மத்திய அரசு

புது தில்லி, ஏப்.8

மார்ச் 31 வரையிலான பருத்தி பருவத்தில், மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய பருத்திக் கழகம் லிமிடெட் முகமை மூலம் இந்திய அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையின் கீழ் 100 லட்சம் பேல்களுக்கு சமமான 525 லட்சம் குவிண்டால் விதை பருத்தியை வெற்றிகரமாகக் கொள்முதல் செய்துள்ளது. இந்த கொள்முதல் நாட்டின் மொத்த பருத்தி கொள்முதலான 263 லட்சம் பேல்களில் 38% ஆகும்.



மாநிலங்களில் அதிகபட்சமாக தெலங்கானாவில் 40 லட்சம் பேல்களும், மகாராஷ்டிராவில் 30 லட்சம் பேல்களும், குஜராத்தில் 14 லட்சம் பேல்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. பருத்தி உற்பத்தி செய்யும் அனைத்து மாநிலங்களிலும் சுமார் 21 லட்சம் பருத்தி விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.37,450 கோடி வழங்கப் பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலை நடைமுறையானது, பருத்தி விவசாயிகளுக்கு லாபகரமான விலையை தொடர்ந்து வழங்கு கிறது. சந்தை விலைகள் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு கீழே வீழ்ச்சியடையும் போது பாதிப்பிலிருந்து அவர்களை இது பாது காக்கிறது. திறமையான கொள்முதலை எளிதாக்க, இந்தியப் பருத்திக் கழகம் லிமிடெட் நாடு முழுவதும் 508 கொள்முதல் மையங்களைத் திறந்துள்ளது.

நியாயமான, வெளிப்படையான, திறன் வாய்ந்த கொள்முதல் நடைமுறை மூலம் பருத்தி விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது.

# உளுந்து விதைப்பு மற்றும் அதன் நன்மைகளை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, ஏப்.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரியான செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர்கள் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சியில் உள்ளனர். இதில் ஒரு பகுதியாக காளை–யார்கோவில் வட்டாரம் உதவி வேளாண்மை இயக்குனர் ரத்தினகுமாரின் கீழ் மாணவர்கள் சந்துரு மு மற்றும் ஹரிஹரன் ஜெ ஆகியோர் பருத்திக் கண்மாய் என்ற கிராமத்தில் உள்ள விவசாயி பிச்சை என்பவரின் நிலத்தில் Fertilizer cum seeder Drillier என்ற இயந்திரத்தைப் பயன்படுத்தி உளுந்து விதைப்பு மற்றும் அதன் நன்மைகளைப் பற்றி செயல்விளக்கம் செய்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு செய்தனர். இந்த இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பயிரை விதைக்க எடுத்துக் கொள்ளும் நேரமும், ஆட்கள் கூலியும் மூன்றில் இரண்டு பங்கு குறையும் என்று அவர்கள் எடுத்து உரைத்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ஆதிதிராவிடர் உழவர் ஆர்வலர் குழுக்களுக்கு மிளகு பறிக்கும் இயந்திரம் வழங்கும் விழா



தேனி, ஏப்.8

தேனி மாவட்டம், காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் ஆதிதிராவிடர் மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் மிளகு பறிக்கும் இயந்திரம் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவ செல்வி வரவேற்புரையாற்றி விவசாயி களின் பழுவைக் குறைக்கும் தொழில்நுட்பங்கள், நவீன இயந்திரங் களின் பயன்பாடுகள் மற்றும் மிளகு பறிக்கும் இயந்திரத்தின் தனித்தன்மைகள் பற்றி விளக்கமளித்தார்.




சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் சேர்மன் முனைவர் பெ.பச்சைமால், தலைமையுரையாற்றி வேளாண் அறிவியல் மையத்தின் செயல்பாடுகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினாராக கலந்து கொண்ட தாட்கோ மேலாளர் க.சரளா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு செயல்படுத்தப்படும் பல்வேறுத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கமிளத்தார். மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் எம்.அருண்ராஜ் மற்றும் முனைவர் வி.கார்த்திக் பாண்டி ஆகியோர் கலந்து கொண்டு மையத்தில் வழங்கப்படும் வேளாண் சார்ந்த நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் பயிற்சிகள் பற்றி விளக்கமளித் தார்கள். விவசாயிகள் மற்றும் அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

போடிநாயக்கனூரைச் சேர்ந்த ஆதிதிராவிடர் உழவர் ஆர்வலர் குழுக்களுக்கு இரண்டு மிளகு பறிக்கும் ஏணிகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் திறன் மேம்பாட்டு பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிறைவில் மைய அலுவலர் அ.அனுப்பிரியங்கா நன்றியுரையாற்றினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின் தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம் குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# கரும்பு பயிரில் மண் திரட்டுதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்த வேளாண் கல்லூரி மாணவி



திருச்சி, ஏப்.8

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளங்கலை பட்டம் பயிலும் நான்காம் ஆண்டு மாணவி ப.சிவப்பிரியா, ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், காட்டுத்தோட்டம் குழுவில் பயிற்சி பெற்று வருகிறார். விளார் கிராமத்தில் கரும்பு பயிரில் மண் திரட்டுதல் பற்றிய தகவல்களை பகிர்ந்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். மண் திரட்டுதல் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் எடுத்துரைத்தார். இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# உணவே மருந்து என்ற விழிப்புணர்வு நிகழ்வில் தோட்டக்கலைக் கல்லூரி மாணவர்கள்



தேனி, ஏப்.8

தேனி மாவட்டம், கம்பம் வட்டாரத்திற்கு உட்பட்ட காமயகவுண்டன்பட்டி கிரா மத்தில் அமைந்துள்ள அரசு மேல் நிலைப்பள்ளியில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு உணவே மருந்து என்ற தலைப்பின் கீழ் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி ஊரக பணி அனுபவத் திட்ட கம்பம் குழு மாணவர்களான கு.திருமலை, இ.விபின் பிரசாத், ர.விஷ்ணு, இரா.சந்திரசேகர், ஆ.கோகுல் ராஜ், கோ.குருநாதன், ரா.ஜீவானந்தம், அ.பொ.ஜெர்ஷின் ராஜ், பூ.கனிஷ்கர் மற்றும் சி.காதர் நவாஸ் ஆகியோர் அப்பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் பாட ஆசிரியர்களின் முன்னிலையில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் பழங்கள் மற்றும் காய்கறிகள் உட்கொள்வதின் அவசியம், சரிவிகித உணவு, உணவினை வீண் விரயமாதலைத் தடுக்கும் முறைகள் ஆகிய தலைப்புகளில் மாணவ, மாணவியர்களுடன் குறித்து கலந்துரையாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மேற்படிப்பு குறித்தான வழிக் காட்டுதல்களையும் வழங்கினர்.

# கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 08.04.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 22 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 20 | 26 | 57 | உருளை (பிற) | 18 | 24 |
| 1B | கத்திரி(Nadu) | 30 | 38 | 57A | உருளை(ஊட்டி) | 16 | 38 |
| 2 | வெண்டை | 28 | 36 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 10 | 14 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 10 | 14 | 60 | கேரட் | 30 | 34 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 56 | 65 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 48 |
| 6 | புடலை | 20 | 28 | 62 | நூல்கோல் | 18 | 22 |
| 7 | பீர்க்கன் | 30 | 38 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 12 | 18 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 32 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 26 | 32 | 66 | காளிபிளவர் | 30 | 35 |
| 11 | பூசணி | 10 | 14 | 67 | பட்டாணி | 80 | 90 |
| 12 | அரசாணி | 7 | 12 | 68 | பூண்டு | 100 | 135 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 26 | 69 | இஞ்சி | 40 | 48 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 24 | 30 | 70 | புருக்கோலின் | 120 | 130 |
| 15 | சி.வெங்காயம் | 28 | 33 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 75 |
| 16 | பெ.வெங்காயம் | 18 | 24 | 72 | குடமிளகாய் | 44 | 50 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 26 | 73 | பட்டர் பீன்ஸ் | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 48 | 55 | | | | |
| 19 | முருங்கை | 15 | 20 | | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 30 | 40 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 36 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 46 | 52 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 80 | 90 | 75 | எலுமிச்சை | 60 | 70 |
| 25 | சேப்பங்கிழங்கு | 60 | 64 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 24 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 30 | 38 | 78 | பப்பாளி | 30 | 34 |
| 28 | கறிவேப்பிலை | 44 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 80 | 100 |
| 33 | சுக்கிட்டிக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 58 |
| 35 | சிறுகீரை/பாலாக்கு | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 24 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 10 | 15 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 40 | 50 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 60 | 66 |
| 40 | கோவக்காய் | 20 | 26 | 91 | பூவன் | 40 | 45 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 58 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 40 | 45 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 18 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 18 | 24 | 96 | நேந்திரன் | 60 | 64 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 18 | 24 | 97 | செவ்வாழை | 60 | 70 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 45 | 50 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 22 | 28 | 102 | நெல்லிக்காய் | 60 | 70 |
| 52 | புளி | 0 | 0 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 32 | 36 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 34 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 14 | 26 | | | | |
| 55A | 0 | 0 | 0 | | | | |

# மண் மாதிரிகளை சேகரிக்கும் முறை மற்றும் மண் பரிசோதனையின் முக்கியத்துத்தை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்



கோவை, ஏப்.8

கோவை மாவட்டம், மணக்கடவு வாண வராயர் வேளாண்மை கல்லூரியின் இறுதி ஆண்டு இளநிலை வேளாண் மாணவிகள், கிராம தங்கல் திட்டத்தின் கீழ், ஆனைமலை ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ந்து 65 நாட்கள் நடைபெறும் பயிற்சியில், விவசாய நிலங்களை நேரில் பார்வையிட்டு மண் மாதிரிகளை சேகரிக்கும் முறையை பற்றி ஆனைமலை விவசாயிகளிடம் செயல் முறையோடு விளக்கினர். அதைத் தொடர்ந்து மண் பரிசோதனை யின் முக்கியத்துவத்தை விவசாயிகளிடம் எடுத்துரைத்தனர்.

# வேர் மூலம் செலுத்தும் தென்னை டானிக் குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விளக்கம்



திருச்சி, ஏப்.8

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டத்தில் ஊரக வேளாண் அனுபவ திட்டத்தில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் மாணவிகள் ஈடுபட்டுள்ளனர்.

தென்னைக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த TNAU தென்னை டானிக்கை வேர் மூலம் செலுத்தும் முறை பற்றி விவசாயிகளுக்கு செய்து விளக்கினார். இந்த டானிக்கை பயன்படுத்துவதன் மூலன் தென்னையில் பச்சையம் அதிகரிக்கும், ஒளிச்சேர்க்கை திறன் கூடும். பாளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும், குரும்பை கொட்டுதல் குறையும், காய்கள் பெரிதாகி பருப்பு எடை கூடும், விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும் எனவும் விளக்கினார். இந்நிகழ்ச்சியில் பல விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் வேளாண் மாணவிகளாகிய அபிநயா, ஆன்டன் பவுலின் மேரி, தாரிணி, ஹரிதா, ஜோதிபிரியா, கிருத்திகா, லாவண்யா, பிரித்திகா, ரம்யா, செந்தமிழ்சுடர், சுவேதா, விஜய லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வானிலை சார்ந்த வேளாண் அறிவிப்பு மற்றும் அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

சேலம், ஏப்.8

சேலம் மாவட்ட வேளாண் வானிலை மையம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையம், திட்ட ஒருங்கிணைப்பாளர், இரா.ஜெகதாம்பாள் மற்றும் செ.பிரபாகரன் (வேளாண் வானிலை அலுவலர்) ஆகியோர் கூறியதாவது,

மாவட்டத்தின் கடந்த வார வானிலையை பொருத்தமட்டில், பகல் மற்றும் இரவு நேர வெப்ப அளவுகள் முறையே 38°செ. (100.4° பா) மற்றும் 22°செ. (71.6°பா) யாக நிலவியது. சேலம் மாவட்டத்தில் சில இடங்களில் லேசான மழை பதிவாகியுள்ளது.

## சேலம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (09.04.2025 – 13.04.2025) | | | | |
|---|---|---|---|---|---|
| தேதி | நாள் - 1 09/04 | நாள் - 2 10/04 | நாள் - 3 11/04 | நாள் - 4 12/04 | நாள் - 5 13/04 |
| மழை (மி.மீ) | 0 | 1 | 0 | 7 | 5 |
| அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 38.0 | 38.0 | 37.0 | 37.0 | 36.0 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24.0 | 25.0 | 25.0 | 26.0 | 25.0 |
| மேகமூட்டம் (ஆக்டா) | சிதறிய மேகங்கள் | லேசான மேகமூட்டம் | சிதறிய மேகங்கள் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் |
| காற்றின் ஈரப்பதம் (%) | 20-80 | 20-70 | 30-70 | 30-70 | 20-70 |
| காற்றின் வேகம் (கி.மீ / மணி) | 6 | 8 | 8 | 8 | 6 |
| காற்றின் திசை | தென் கிழக்கு | தென் மேற்கு | தென் மேற்கு | வட மேற்கு | மேற்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (9.4.25 முதல் 13.4.25 வரை)

இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள மாவட்ட கணிப்பின் படி, அடுத்த ஐந்து நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலையில், வானம் பெரும்பாலும் லேசான மேகமூட்டத்துடன் காணப்பட்டு நான்காம் நாள் (12.4.25) மற்றும் ஐந்தாம் நாள் (13.4.25) மாவட்டத்தின் சில இடங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் வெப்பம் 38.0° செ. (100.4° பா)–க்கு மிகாமலும், இரவு வெப்பம் 24.0°செ. (75.2° பா) யாகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் மேற்கிலிருந்தும் வீச அதன் வேகம் மணிக்கு 6–8 கி. மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 20–80%மாக நிலவும்.

## கால்நடைகள், கோழிகள் & வேளாண் வானிலை ஆலோசனை

### கால்நடைகள்

கோடை காலத்தில் கறவை, சினை மாடுகள் மற்றும் ஆடுகளில் வெப்ப அயற்சியினை தவிர்க்க காலை (6.30 முதல் 10 மணி வரை) மற்றும் மாலை (4.30 முதல் 6.30 வரை) நேரத்தில் மட்டும் மேய்ச் சலுக்கு அனுப்ப வேண்டும். அதிக வெய்யில் உள்ள நேரங்களில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் கொட்டகையிலோ அல்லது மர நிழலியோ தங்கவைக்க வேண்டும். மேலும் மாட்டினை தினசரி இரண்டு அல்லது மூன்று முறை குளிர்ந்த நீரினால் குளிப்பாட்ட வேண்டும்.

### கோழிகள்

கோழிப்பண்ணையாளர்கள் தொடர்ந்து கோடை கால பராமரிப்பு முறைகளை தீவிர முறையில் கடைபிடிக்க வேண்டும். குறிப்பாக தீவன (90 – 95 கிராம் / நாள் / கோழி) எடுப்பு மிகவும் குறைந்து உள்ளது. அதன் காரணமாக முட்டை உற்பத்தியும், முட்டையின் எடையும் மிகவும் குறைந்துள்ளது. ஆதலால், அடுத்து வரும் நாட்களில் கோடைகாலத்திற்கான தீவன மேலாண்மையை கடை பிடிக்க வேண்டும். தீவனத்தில் அமினோ அமிலங்கள் குறிப்பாக மித்தியோனின் மற்றும் லைசின் சேர்த்தல், தாவர எண்ணெயைக் கொண்டு எரிசக்தியின் அளவை உயர்த்துதல், எலக்ட்ரோலைட்ஸ் உப்புக்கள் மற்றும் வைட்டமின் சி போன்றவற்றை கலந்து தர வேண்டும். அதிக அளவில் முட்டை ஓடு குறைபாடுகளை களைய, சோடா உப்பை டன்னிற்கு 1.5 – 2.0 கிலோ வரை சேர்த்து அளிக்க வேண்டும். அயற்சி ஏற்படாவண்ணம், தீவனத்தை காலை (5 – 10 மணி ) மற்றும் மாலை ( 5– 9 மணி) மட்டுமே தர வேண்டும். இதனால் வெப்ப அதிர்ச்சியில் இருந்து கோழிகளை காப்பாற்றலாம். காலை முதல் இரவு வரை குளிர்ந்த நீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### தர்பூசணி

தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக தர்பூசணி சாகுபடி செய்துள்ள பகுதியில் இலைப்பேண் தாக்கு தலினால் சேதம் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஊதா வர்ண ஒட்டும் பொறி ஒரு ஏக்கருக்கு 5 வீதமும், இலை வழி தெளிப்பானாக வேப்ப எண்ணெய் ஒரு லிட்டருக்கு 3 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இதை தொடர்ந்து பொருளாதார சேத நிலை தாண்டும் போது தையோமித்தாக்சம் என்ற பூச்சிக் கொல்லியை ஒரு லிட்டருக்கு 2 கிராம் வீதம் கலந்து ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் தெளிக்க வேண்டும்.

### மரவள்ளி

மரவள்ளி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் நட்ட 2, 3 மற்றும் 4 வது மாதங்களில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மர வள்ளி பூஸ்டரை மூன்று முறை இலை வழி தெளிப்பு செய்ய வேண்டும்.

### வாழை

வாழை நடவு செய்துள்ள விவசாயிகள் செடி ஒன்றுக்கு அசோஸ்பைரில்லம் + பாஸ்போபாக்டீரியா இரண்டையும் தலா 20 கிராம் என்ற அளவில் நட்ட 1 மாதம் மற்றும் 5 மாதத்திற்குள் இரண்டு தடைவை இட வேண்டும்.

### கொடி வகை காய்கறிகள்

வரும் நாட்களில் வெப்ப நிலை அதிகரிக்க வாயப்புள்ளதால், காய்கறிகள் முக்கியமாக கொடி வகை காய்கறிகள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், காய்ந்த இலை, புற்கள் கொண்டு மண்ணில் மூடாக்கு அமைக்கவும். இவ்வாறு செய்வதால் மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்பட்டு பயிரின் வளர்ச்சி மேம்படும்.

### தென்னை


தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் தென் படுகிறது. இதனை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் 5 மில்லியுடன் ஒட்டும் திரவம் 1.5 மில்லி / லிட்டர் தண்ணீரில் கலந்து பவர் கண் இயந்திரத்தின் மூலம் தெளிக்கவும் மற்றும் 3 அடி X 1.5 அடி மஞ்சள் அட்டை - 10 எண் / ஏக்கருக்கு பரவலாக கட்ட வேண்டும்.

கரும்பூஞ்சனத்தை மைதா மாவு கரைசலை தெளித்தும் கிரைசோபிட் இரை விழுங்கிகள்- 400 எண்ணிக்கைகள் மற்றும் என்கார்சியா ஒட்டுண்ணிகள் - 100 எண்ணிக்கைகள் வீதம் ஒரு ஏக்கருக்கு விட்டும் கட்டுப்படுத்தலாம். ரசாயன மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.

இதனை, மாவட்ட வேளாண் வானிலை மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் மாவட்டம் தெரிவித்துள்ளது.

மேலும் விபரங்களுக்கு **திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் - 636 203, 0427 - 2422550, 90955 13102** தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# சிற்றுண்டி (ஸ்நாக்ஸ்) யாக மாறும் விதைகள்

இன்றைய கால கட்டத்தில் இளைய தலைமுறைகள் விரும்பி சாப்பிடும் சிற்றுண்டியாக (SNACKS) யாக சில விதைகள் பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையில் என்னென்ன விதைகள் என்பதை பார்ப்போம்.

1) பூசணி விதைகள்
2) சணல் விதைகள்
3) சியா விதைகள்
4) ஆளி விதை
5) எள்
6) சூரிய காந்தி

விதைகள் மிகச்சிறப்பான ஸ்நாக்ஸ்யாக உள்ளது. அதுமட்டுமல்ல இவைகள் பார்ப்பதற்கு சிறியதாக இருந்தாலும் அவற்றில் விட்டமின்கள், கனிம சத்துகள் மற்றும் இதர அத்தியாவசிய சத்துகளும் உள்ளன.

**இந்த விதைகளை எந்த எந்த முறையில் உட்கொள்ளப் படுகிறது?**

வறுத்தும், ரொட்டி மற்றும் இனிப்பு, பலகாரங்களிலும், பேக்கரி, சாலட்கள் மற்றும் டிரெயில் மிக்ஸ் போன்ற உணவு பொருட்களாகவும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி சிற்றுண்டியாக உட்கொள்ளுகிறோம்.

**இதை உட்கொண்டால் என்ன என்ன பயன்கள்?**

1) விதைகள் ஒரு வரமாக பார்க்கப்படுகிறது. பூசணி விதைகள், சூரிய காந்தி விதைகள் உட்கொண்டால் பெண் களுக்கு ஏற்படும் உடல்ரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

2) சர்க்கரை நோயை கட்டுப்படுத்த உதவுகிறது. இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.

3) ஆர்த்ரீடிஸ் நிவாரணியாக இந்த விதைகள் பயன்படுத்தப் படுகிறது. ஓமேகா 3 கொழுப்பு அமிலங்கள் மேற்கண்ட விதைகளை தினமும் கைப்பிடி அளவு உட்கொள்ள வேண்டும்.

4) இந்த விதைகள் நார் சத்துகள் நிறைந்து இருப்பதால் மலச்சிக்கல் போக்கப்படுகிறது.

**பொதுவாக இந்த விதைகளில் என்ன என்ன சத்துகள் இருக்கும்.**

ஒரு அவுன்ஸ் விதையில் (1/4 கப்) உள்ள சத்துகள் புரதம் 4-5 கிராம், கார்போஹைறடிரேட் 11.9, நார்சத்து 9-10, கொழுப்பு 8-7 மாறிவரும் உணவு பழக்கங்களுக்கேற்ப விதைகளை ஒரு வித டேஸ்ட்டுக்காக இன்று பெரிய பெரிய நட்சத்திர உணவு விடுதிகளில், உடல் ஆரோக்கியத்தை காத்திட இந்த விதை களை ஸ்நாகஸ்-யாக பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் பொறித்த இனிப்பு கார வகைகளை சாப்பிடுவதை விட ஆரோக்கியமான சிற்றுண்டியாக விதைகள் உள்ளது. பறவைகள் போல விதைகளின் பருப்புகளை கொத்தி கொத்தி சாப்பிடுவோம்.

ஆரோக்கியமாக இருப்போம், எண்ணெய் பண்டங்களை தவிர்ப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சூட்டி பூஞ்சையை கட்டுபடுத்த ஸ்டார்ச் கரைசல் வேளாண் மாணவிகள் விளக்கம்



திருச்சி, ஏப்.8

திருச்சி, புள்ளம்பாடியில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் மாணவிகளின் கிராமப்புற விவசாய பணி அனுபவ திட்டம் (RAWE) மூலம் சூட்டி பூஞ்சையை கட்டுபடுத்த ஸ்டார்ச் கரைசல் செய்வது குறித்து G-5 குழு மாணவிகள் செயல்முறை விளக்கம் அளித்தனர். சூட்டி பூஞ்சையானது இலையின் மீது கருப்பு அடர் நிறத்தில் இருக்கும். இது ஒளிச்சேர்க்கை செயல்பாட்டைப் பாதிக்கும். இதனை கட்டுப்படுத்த ஸ்டார்ச் கரைசல் தயாரிக்கும் முறை குறித்து மாணவிகள் விளக்கம் அளித்தனர். ஸ்டார்ச் கரைசல் தயாரிப்பதற்கு 1 கிலோ ஸ்டார்ச்/மைதாவை 5 லிட்டர் தண்ணீரில் கலந்து கொதிக்க வைத்து 20 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும். ஸ்டார்ச் காய்ந்து, செதில்களாக உருவாகி பின் அவை பூஞ்சையுடன் சேர்ந்து அகற்றப்படுகின்றன. இது சூட்டி பூஞ்சையை கட்டுப்படுத்த எளிய முறையாகும்.

# மண் மாதிரிகள் சேகரிக்கும் முறையை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்




சிவகங்கை, ஏப்.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரியான வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவிகள் மு.அபிநயஸ்ரீ மற்றும் செ.அனுசூர்யா கிராமபுற வேளாண்மைப் பயிற்சி திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவகங்கை மாவட்டம் S.புதூர் வட்டாரத்தில் மாந்தகுடிபட்டி கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை மற்றும் மண் மாதிரிகள் எடுப்பதற்கு முன்பு கவனிக்க வேண்டிய குறிப்புகள் குறித்தும் விளக்கம் அளித்தனர்.

மண் மாதிரி எடுக்கும் பகுதி முழுவதையும் குறுக்கும் நெடுக்குமாக நடந்து, அப்பகுதியில் காணப்படும் நிலச்சரிவு, நிறம், நயம் மேலாண்மை முறை, பயிர் சுழற்சி இவற்றிற்கு ஏற்றாற்போல பல பகுதிகளாகப் பிரித்து, தனித் தனியாக மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும். வரப்பு, வாய்க்கால்கள், மரத்தடி நிழல் பகுதிகள் மற்றும் கிணற்றுக்கு அருகிலும் மக்கு, குப்பை உரங்கள், பூஞ்சான மற்றும் பூச்சி மருந்து இடப்பட்ட பகுதிகளில் மண் மாதிரி எடுக்கக் கூடாது. அதிக பட்சமாக 5 எக்டேருக்கு (5ha) ஒரு மாதிரியும், குறைந்த பட்சம் கால் எக்டேருக்கு (0.25ha) ஒரு மாதிரியும் சேகரிக்க வேண்டும். மேலும் இதனைத் தொடர்ந்து மண் பரிசோதனை குறித்தும் விவசாயிகளுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# சூரிய விளக்கு பொறி பற்றிய செயல்திறன் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

நாகப்பட்டினம், ஏப்.8

நாகப்பட்டினம் மாவட்டம் பொன் வெளி ஊராட்சியில் கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவிகளான திவ்யா, கீர்த்திகா, பிரீத்தி, ருத்ரலேகா, சிந்தியா, சினேகா மற்றும் சோனா ஆகியோர் 'சூரிய விளக்கு பொறியை' பயன்படுத்தி பூச்சியை எப்படி கட்டுப்படுத்துவது என்பதையும் அதன் முக்கியத்துவத்தையும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கினர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகள் நில உடமைகளை பதிவு செய்ய ஏப்ரல் 15 கடைசி நாள்

இராணிப்பேட்டை, ஏப்.8

விவசாயிகள் அரசின் பல்வேறு திட்டப் பலன்களைப் பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும், அனைத்து விவரங்களையும் மின்னணு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (AgriStack) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது, விவசாயிகளின் பதிவு விவரங்களுடன், ஆதார் எண், கைபேசி எண், நில உடைமை விவரங்களையும் விடுபாடின்றி பதிவு செய்து தனித்துவமான அடையாள எண் வழங்கும் பணி வேளாண்மை துறையினரால் சம்பந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் பொது சேவை மையங்களிலும் பதிவு செய்து பயன்பெறலாம்.

2025-26ஆம் நிதி ஆண்டு முதல், பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN), பயிர்க்காப்பீடுத் திட்டம் (PMFBY) போன்ற ஒன்றிய மற்றும் மாநில அரசின் திட்டங்களில் விவசாயிகள் தேசிய அளவிலான தனித்துவ அடையாள எண் இருந்தால் மட்டுமே பயன் பெறமுடியும்.

இந்த பணி வாலாஜா வட்டாரத்தில் அனைத்து கிராமங்களிலும் நடைப்பெற்று வருகிறது. எனவே அனைத்து விவசாயிகளும் உடனடியாக கம்ப்யூட்டர் சிட்டா, ஆதார் அட்டை, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள கைப்பேசி ஆகியவற்றுடன் அந்தந்த கிராமத்துக்கு என்று நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களிடம் சென்று எவ்வித கட்டணமுமின்றி 15.04.25 ஆம் தேதிக்குள் அடையாள எண் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி தெரிவித்தார்.

வாலாஜா வட்டாரத்தில் கல்மேல்குப்பம் கிராமத்தில் வேளாண் அடுக்குத் திட்டத்தில் விவசாயிகளின் விவரங்கள் பதிவு செய்யும் பணி வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி தலைமையில் நடைப்பெற்றது. வேளாண்மை அலுவலர், நித்யா, உதவி வேளாண்மை அலுவலர் கலையரசன் மற்றும் இல்லம் தேடி கல்வியாளர் சோனியா விவசாயிகளின் விவரங்கள் பதிவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# தென்னையில் வெள்ளை ஈ கட்டுப்பாடு வேளாண்மை கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம்



ஈரோடு, ஏப்.8

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல் பகுதியில் உள்ள, குமரகுரு வேளாண்மை கல்லூரியை சேர்ந்த மாணவிகள் தே.ஸ்ரீநிதி, ச.ரித்திகா, த.சௌமியா, கோ.தமிழினி, ரா பிரியதர்ஷிகா, க.உமா ஆகிய இறுதி ஆண்டு பாடத்தில் பயின்று வருகின்றனர். ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தை (Student READY Programme) பெருந்துறை வட்டாரத்தை சேர்ந்த பாலக்கரை கிராமத்தில் மேற்கொண்டனர். சந்திரன் என்னும் விவசாயின் தென்னந் தோப்பில் மார்ச் 14 அன்று வேளாண் விரிவாக்க பயிற்சி நடத்தப் பட்டது. தென்னையில் அதிக அளவில் பாதிக்கக்கூடிய ரூகோஸ் வெள்ளை ஈ கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இச்செயல் விளக்கத்தில் வேப்ப எண்ணெய் கரைசல், மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி ஆகிய வற்றை பயன்படுத்தி வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்துவதை குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. தோட்டக்கலை உதவி இயக்குனர் சிவகுமாரன் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் சுகுமார் உடன் இருந்தனர்.

# டிரைக்கோடெர்மா விரிடியின் செயல்முறைகளை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாகப்பட்டினம், ஏப்.8

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவர் களான கரண், ஜீவா, துரையரசு, கௌதம், ஸ்ரீநாத், ராகேஷ் ஆகியோர் ஊரக பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக கீழையூர் வட்டாரத்தில் உள்ள மீனம்பநல்லூர் கிராமத்தில் வேளாண் தொழில்நுட்பம் குறித்த செயல் நிகழ்ச்சியினை நடத்தினர். இதில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணி எனும் டிரைக்கோடெர்மா விரிடி (பூஞ்சாணைக் கொல்லி) அதன் செயல்முறைகளையும் பயன்களையும் அக்கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்டினர்.

# மக்காச்சோளப் பண்ணை பள்ளி நடைபெற்றது



திண்டுக்கல், ஏப்.8

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் கொத்தப்புள்ளி வட்டார முன்னோடி விவசாயி பழனிச்சாமி, த/பெ.ராம சாமி, தோட்டத்தில் மக்காச்சோளப் பண்ணை பள்ளி நடைபெற்றது. இந்நிகழ்வில் துணை வேளாண்மை இயக்குனர் ரமேஷ், தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன், முன்னிலையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் சீனிவாசன், மக்காச் சோளப் பயிர் செய்யும் நிலத்தில் மண் பரிசோதனை எடுத்தல், நடவு முறை, களை எடுத்தல், படைப்புழுக்களை கட்டுப்படுத்தும் முறை அதனை தவிர்க்க மெட்டாரைஸியம் பயன்படுத்துதல் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை செய்தல் போன்ற தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.




இப்பயிற்சியில் மக்காச்சோள தோட்டத்தில் நேரில் சென்று செயலில் விளக்கமாக பயிர்கள் பராமரிப்பு முறை பற்றி எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் முருகன் உதவி விதை அலுவலர் பூபதி அ, ஆகியோர் பங்கேற்க துணை வேளாண்மை இயக்குனர், இருளாயி செயல் விளக்க பயனளிக்கு பேட்டரி ஸ்ப்ரேயர் முழு மானியத்தில் வழங்கினார் மற்றும் பெருமாள் சாமி, சோலார் லைட் மானியத்தில் தரப்பட்டது. முத்துநாயகி, தார்பாலின் மானியத்தில் வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின் தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம் குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# மண் வளம் பாதுகாக்க கோடை உழவு

தூத்துக்குடி, ஏப்.8

கோடைக்காலத்திலும் தென்மேற்கு பருவமழை காலத்திலும் பெய்யும் மழைநீர் நிலத்தில் சேமித்திட கோடை உழவு அவசியமாகிறது. கோடை உழவு என்பது மார்ச், ஏப்ரல் மாதத்தில் நிலத்தின் சாய்வுக்கு குறுக்கே உழவு செய்தல் ஆகும். மானாவாரி பயிர்கள் பெரும்பாலும் வடகிழக்கு பருவமழை பொழியும் காலங்களில் பயிர் செய்யப்படுகிறது.

மானாவாரி பயிர்கள் பெரும்பாலும் அக்டோபர் முதல் வாரத்திலிருந்து சாகுபடி செய்யப்படுகின்றது. எனவே அக்டோபர் முதல் வாரத்தில் உழுது விதைத்தால், விதைத்த பின்பு பெய்யும் மழை மட்டும் பயிர் வளர்ந்து விளைச்சல் எடுப்பதற்குப் போதாது. எனவே, கோடைகாலத்திலும், தென் மேற்குப் பருவகால மான ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை பெய்யும் மழை நீரை நிலத்தில் சேமித்திட கோடையில் உழவு செய்தல் வேண்டும். சம்பா பயிர் அறுவடை முடிந்ததும் அவசியம் கோடை உழவு செய்ய வேண்டும். முதல் பயிர்ர் சாகுபடி ஆனி – ஆடி மாதங்களில் துவங்கி, இரண்டாவது பயிர் தை மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. இதற்கு பின் உள்ள இடைப்பட்ட காலமான மாசி – வைகாசி வரை நிலம் பண்படுத்தப்படாமல் பல்வேறு இழப்புகளுக்கு உள்ளாகும் நிலையில் தரிசாக உள்ளது. அப்பொழுது, நாம் வயலை நன்கு உழுது பண்படுத்தி புழுதி நிலமாக்க வேண்டும். அவ்வாறு செய்வதினால் புழுதியானது மண்ணின் மேல் ஒருபோர்வை போல் மூடி கீழே உள்ள நீர் ஆவியாகாமல் சேமித்து வைக்கப்படுகின்றது.

**கோடை உழவின் பயன்கள்**

● முதல் / இரண்டாம் பயிரின் அறுவடையின் போது பயிரிலிருந்து கொட்டிய இலைச் சருகுகள் நிலத்தின் மேல் போர்வையாக இருக்கும்.

● அறுவடைக்குப்பின் வேரின் அடிக்கட்டைகள் மக்குவதற்கு அதிக வாய்ப்பின்றி இருக்கும்.

● மேல் மண் இறுக்கமாக காணப்படும். இதனால் மழை நீர் பூமிக்குள் இறங்காமல் மேல் மண்ணுடன் எடுத்துச் செல்லப்படும்.

● நிலத்தோடு மக்க வேண்டிய பயிர்கள், சருகுகள் காற்று வீசும் போது வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்.

● முந்தையப் பயிரின் தூர்கள், கரையானின் தாக்குதலுக் குட்பட்டு பயனின்றி விரயமாகும்.

மேற்கூறியவற்றை சரியான முறையில் பயனுள்ளதாக மாற்றுவதற்கு கோடை உழவு அவசியமாகக் கருதப்படுகின்றது. மேலும், கோடை உழவு செய்வதன் மூலம் மேல்மண் அரித்து செல்லப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டு மண்ணின் ஈரம் மற்றும் நில வளம் காக்கப்படுகின்றது.

கோடை உழவு செய்வதினால் நிலத்திலுள்ள பெரிய கட்டிகள் உடைக்கப்பட்டு நிலம் நன்கு பண்படுத்தப்படுகின்றது. இதனால் மழை பெய்வதற்கு முன்பே பருவ விதைப்பு மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும். கோடை உழவு செய்யாமல் இருந்தால் பெய்யும் மழை நீர் நிலத்திற்குள் இறங்காமல் மேல்பரப்பில் வழிந்தோடி சத்துள்ள மேல் மண் அரித்துச் செல்லப்படும். நில வளம் குறைந்து, பயிரின் விளைச்சல் குறைவதுடன் பூச்சி தாக்குதலும், களைகளும் அதிகமாகும். கோடை உழவினால் மண்ணரிப்பு ஏற்படாமல், மழை நீர் முழுவதும் உறிஞ்சப் படுவதுடன், பூச்சி பூஞ்சாணநோய் தாக்குதலிலிருந்து அடுத்து பயிரிடப்படும் பயிரையும் காக்க முடிகிறது.




மேலும் முந்தைய பருவத்தின் அறுவடையின் போது நிலத்தில் சிதறிய விதைகளும் அழிக்கப்படுவதால், அடுத்த பருவத்தில் விதைப் பண்ணை அமைக்கும் போது கலவன் பயிர்களை எளிதாக கட்டுப்படுத்தலாம்.

களை விதைகள், பூச்சிகளின் முட்டைகள், புழுக்கள், கூட்டுப் புழுக்கள் மற்றும் பூஞ்சாணங்கள் அழிக்கப் படுகிறது. கோடை உழவு செய்வதினால் மண்ணின் காற்றோட்டம் அதிகரிக்கப் படுவதால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் செயல்பாடும் அதிகரிக்கிறது. இதனால் அங்கக சத்துக்கள் மக்கி பயிர்களுக்கு சத்துக்கள் கிடைக்க வழி வகை செய்கிறது.

எனவே விவசாய பெருமக்கள் கோடை உழவு செய்து நிலத்தின் வளத்தை மேம்படுத்துமாறு திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர் ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக் நூஹ் ஆகியோர்கள் தெரிவிக்கிறார்கள்.

# வேளாண் கல்லூரி மாணவர்களின் விவசாயக் கண்காட்சி நடைபெற்றது



திருச்சி, ஏப்.8

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி பகுதியில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தங்கிப் பயிற்சி பெறும் எம்.ஆர்.பாளையத்தைச் சேர்ந்த நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்களான வி.அபிதரன், த.தேவா, மா.க.எழிலரசன், க.பரத், ந.தீபன் ராஜ், சி.தினேஷ் குமார், தி.ஞானவேல், மு.குரு பிரசாத், ரா.ஹனீப்முஹம்மது, பி.ஹரி ஸ்ரீ மற்றும் ம.இள.இளங்குமரன் ஆகியோர் கொத்தமங்கலம் கிராமத்தில் 'விவசாய கண்காட்சி' நடத்தி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இந்த கண்காட்சியில் சுருள்பாசி வளர்ப்பு, மைக்ரோ கிரின்ஸ், ஊடுபயிர் பற்றிய செயல்முறை விளக்கம் மற்றும் உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் சிறந்த விதைத்தேர்வின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினர். மேலும் கண்காட்சி மூலம் விவசாயிகளுக்கு செயல் விளக்கமளித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

# மண்புழு உரம் தயாரித்தல் குறித்து பயிற்சி பெற்ற கிராமப்புற விவசாய அனுபவ பயிற்சி திட்ட மாணவிகள்



சிவகங்கை, ஏப்.8

சிவகங்கை மாவட்டம், S.புதூர் வட்டம், இயற்கை விவசாயத்தில் நாட்டமுள்ள செல்வத்திடம் மண்புழு உரம் தயாரித்தல் முறை பற்றி S.அபர்ணா, V.ஹேமலதா தெளிவாக கற்றுக் கொண்டனர். மண்புழுக்கள் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் அறிவியல் முறை மண்புழு உரம் ஆகும்.அவர் மண்புழு உரம் தயாரிப்பது குறித்தும் அதன் நன்மைகள் பற்றியும் மாணவிகளிடம் தெரிவித்தார். மேலும் அவர் மண்புழுக்களின் வகைகள், மண்புழு உரம் தயாரிக்கும் முறை, மண்புழுக்களுக்கு ஏற்ற தீவனம், மண்புழு வளர்ப்பு, அதற்கான கட்டமைப்பை உருவாக்குதல், சிறிய பரப்பளவில் மண்புழு உரம் தயாரித்தல் உள்ளிட்டவை பற்றி விளக்கமளித்தார். மண் புழு உரத்தை பயன்படுத்துவதன் மூலம் மண்வளம் மேம்படுகிறது, நச்சு தன்மை இல்லாத உணவை உற்பத்தி செய்ய உதவுகிறது. பழங்களின் மணம், ருசி, நிறம் சேமித்து வைக்கும் காலம் போன்றவை அதிகரிக்கின்றன என்றும் கூறினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தென்னையில் வெள்ளை ஈ கட்டுப்படுத்துதல் பயிற்சி



கடலூர், ஏப்.8

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில், 8.4.25 அன்று தென்னையில் வெள்ளை ஈ தாக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய பயிற்சி குறிஞ்சிப்பாடி வட்டம், இரங்கநாதபுரம் கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து வாழ்த்துரையாற்றினார். தொழில்நுட்ப உரையை கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் துரைசாமி, தென்னையில் ஏற்படும் நோய் தாக்குதல் பற்றி விரிவாக விளக்கினார். மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் முனைவர் ப.இந்திராகாந்தி, தென்னை மரங்களில் வெள்ளை சுருள் ஈக்களின் தாக்குதலை நேரில் பார்வையிட்டு அதனை கட்டுப்படுத்தும் முறைகளை விவசாயிகளுக்கு எடுத்து ரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகுமார் ஒருங்கிணைந்த மேலாண்மை முறை களை எடுத்துரைத்தார்.

தென்னையில் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த தன்னை கீற்றுகளின் அடிப்பரப்பை நோக்கி தண்ணீர் பீச்சி அடிக்கலாம். மஞ்சள் நிற பாலீத்தீன் தாள்களில் இருபுறமும் விளக்கெண்ணெய் தடவி ஏக்கருக்கு 20 வீதம் தென்னை மரத்தில் 6 அடி உயரத்தில் தொங்க விடவும். முட்டைகளை ஏக்கருக்கு 400 வீதம் கீற்றுகளில் இணைக்கலாம். பத்து மரத்திற்கு ஒரு இலை என்ற எண்ணிக் கையில் இணைக்கலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு வேப்ப எண்ணெய் 5 மில்லி மற்றும் ஒட்டும் திரவம் 1 மி என்ற அளவில் கலந்து கீற்றுகள் நனையும் படி தெளிக்கவும். கருப்பு பூஞ் சாணத்தை நீக்க 25 கிராம் மைதா மாவு பசையை 1 லி. தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இயற்கை உயிர் எதிரிகளை பாதுகாக்க பூச்சி கொல்லிகள் பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட உரங்களை தொடர்ந்து பயன்படுத்தியும் பயன் அடையலாம். மேலும் விவசாயிகளுக்கு வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக தென்னை டானிக், வேப்ப எண்ணெய் வழங்கப் பட்டது. இப்பயிற்சிக்கு குறிஞ்சிப்பாடி வட்டாரத்தை சேர்ந்த 35 மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# நவீன விவசாய முறைகள் குறித்து எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்



மதுரை, ஏப்.8

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர் சி.பிரேம் சங்கர், கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்தின் ஒரு பகுதியாக நிலக்கோட்டையில் உள்ள வீலிநாயக்கன் பட்டியில் கிராமப்புற விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகள் அறிமுகம், வேளாண்மை திறன்களை மேம்படுத்து குறித்து எடுத்துரைத்தார்.

அதன்படி 'மண் பரிசோதனைக்கான மண் மாதிரி சேகரிப்பு' என்ற தலைப்பில் ஒரு செயல்விளக்கம் நடைபெற்றது. இதில், விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண் வளத்தை முறையாக அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். சரியான முறையில் மண் மாதிரிகளை சேகரிக்கும் நுட்பங்கள், மண் பரிசோதனையின் அவசியம் மற்றும் அதன் மூலம் பெறப்படும் தகவல்களைப் பயன்படுத்தி உர மேலாண்மையை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து விளக்கினார். மண் பரிசோதனையின் மூலம் மண்ணின் pH மதிப்பு, ஊட்டச்சத்து அளவு மற்றும் பிற முக்கிய பண்புகளை அறிந்து கொள்வதன் மூலம், விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு தேவையான உரங் களை சரியான அளவில் பயன்படுத்த முடியும் என்றும், இதனால் செலவுகளைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க முடியும் என்றும் கூறினார்.

அடுத்ததாக நானோ யூரியாவின் பயன்பாடு மற்றும் அதன் நோக்கம்' என்ற தலைப்பில் மற்றொரு செயல்விளக்கம் நடைபெற்றது. இதில், நானோ யூரியாவின் நன்மைகள் மற்றும் அதன் பயன்பாடு குறித்து விரிவாக விவரித்தார். நானோ யூரியா, வழக்கமான யூரியாவை விட அதிக செயல்திறன் கொண்டது என்றும், இது மண் மற்றும் சுற்றுச்சூழலுக்கு குறைந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றும் தெரிவித்தார். நானோ யூரியாவின் பயன்பாடு, உரச் செலவை குறைப்பதோடு, விளைச்சலையும் அதிகரிக்க உதவுகிறது என்றும், இது எதிர்கால விவசாயத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் விளக்கினார்.

மேலும், 'மண்புழு உரம் உற்பத்தி மற்றும் அதன் நன்மைகள்' என்ற தலைப்பில் ஒரு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதில், மண்புழு உரம் தயாரிக்கும் எளிய மற்றும் பயனுள்ள முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மண்புழு உரம், இயற்கை விவசாயத்திற்கு மிகவும் உகந்தது என்றும், இது மண் வளத்தை மேம்படுத்துவதோடு, பயிர்களின் வளர்ச்சிக்கும் உதவுகிறது என்றும் கூறினார். மண்புழு உரம் தயாரிப்பதன் மூலம், விவசாயிகள் தங்கள் நிலத்தில் இயற்கை உரங்களை உற்பத்தி செய்து, ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்க முடியும் என்றும், இது சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும், செயல்விளக்கத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இரண்டு துண்டு பிரசுரங் களையும் வழங்கினார். விவசாயிகள் அவர்களது சந்தேகங் களையும் கேட்டறிந்து பயன் பெற்றனர்.

## மஞ்சள் ஒட்டும் பொறி மற்றும் உழவர் செயலி பற்றி பயிற்சி முகாம் நடத்திய வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள்



ஈரோடு, ஏப்.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் குமரகுரு வேளாண்மை கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் இறுதி ஆண்டு பாடத்தில் மேற்கொள்ளும் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தை மேற்கொள்ள (Student READY Programme) அன்னூர் வட்டாரத்தைச் சேர்ந்த கஞ்ச பள்ளி கிராமத்தில் மஞ்சள் ஒட்டும் பொறி (Yellow sticky trap) மற்றும் உழவர் செயலி பற்றி பயிற்சி நடத்தினர். வெள்ளை ஈக்களை கட்டுப் படுத்தும் வகையில் உள்ளது மஞ்சள் ஒட்டும் பொறி. எந்த ஒரு செயற்கை முறைகளையும் பயன்படுத்தாமல், இயற்கைக்கு ஒன்றி இருப்பது இந்த மஞ்சள் ஒட்டும் பொறி. அதனை வீட்டில் இருந்தபடி எப்படி செய்வது மற்றும் அதனை உபயோகிக்கும் முறை பற்றியும் விளக்கினார். மேலும், ஈக்களின் அறிகுறியையும் உரைத்தனர். அதுமட்டுமின்றி உழவர் செயலியின் நோக்கம், உபயோகிக்கும் முறை மற்றும் அதனின் நன்மை பற்றியும் விரிவாக விளக்கினர். அங்கு வந்துள்ள விவசாயிகள் பலருக்கும் உழவர் செயலியை பயனுள்ள வகையில் பதிவிறக்கம் செய்து கொடுத்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**